*உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இல. : 18/2019*

எனது இலக்கம்: *ஏ.எப்./1/02/*பொசோன்
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு *07.*
*2019.06.07*

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
சகல மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
சகல திணைக்களத் தலைவர்கள்,
சகல கூட்டுத்தாபனங்கள்மற்றும் நியதிச் சட்ட சபைத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
பிரதேச செயலாளர்கள்,

## <u>அரச பொசோன் விழாவினை கொண்டாடுதல் - *2019*</u>

ஸ்ரீ புத்த வருடம் *2563* ஆக அமைந்துள்ள *2019* ஆம் ஆண்டு ஜூன் மாதம் *16* ஆம் ஞாயிற்றுக் கிழமை பொசோன் போயா நோன்மதி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இம்முறை பொசோன் விழாவிற்காக *2019* ஜூன் மாதம் *12* ஆந் திகதி முதல் *18* ஆந் திகதி வரையான காலப்பகுதியை பொசோன் வாரமாகவும் அரசங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

*(02).* அவ்வாறே, "சப்பே தஸன்டி தன்டஸ்ஸ" ( சகல உயிரினங்களும் தண்டனைக்கு அச்சுகின்றன) என்ற தொனிப்பொருளை பொசோன் வாரத்தின் வாசகமாக அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

*(03).* அதனால், *2019.06.13* ஆந் திகதியன்று இரவில் சகல மாவட்ட செயலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும் இரவு பூராகவும் பிரித் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்வதற்கும், *14* ஆந் திகதியன்று மகா சங்கத்திற்கான நன்பகல் தானம் குறைந்த பட்சம் *12* பௌத்த பிக்குமார்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இவ் விடயம் தொடர்பாக அவசியப்படும் நிதி ஒதுக்கீடுகளை உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படும்.

*(04).* அவ்வாறே, *2019* ஆம் ஆண்டு ஜூன் மாதம் *12* ஆந் திகதி முதல் *18* ஆந் திகதி வரை அரசின் சகல நிறுவனங்களிலும் மற்றும் கட்டிடங்களிலும் பௌத்த கொடியை ஏற்றி வைப்பதற்கும், அவ் அனைத்து நிறுவனங்கள் மற்றும் கட்டிடங்களிலும் பொசோன் அலங்காரங்களினால் அழகுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*(05).* மேலும், நாடு பூராகவும் மதுபானக் கடைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் அனைத்தையும் மூடி வைப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

*(06).* இதற்கு இணையாக, உமது பிரிவில் உள்ள சகல கிராம அலுவலர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இவ் விடயம் பற்றி அறிவித்து, அவர்களின் சேவையையும் கிராம மட்டத்தில் இந் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு அவசியப்படும் ஆலோசனையை வழங்குதல்.

*(07).* சகல மாற்று மதத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும் வகையிலும் மத ரீதியான நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையிலும் சகல பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் அரச பொசோன் விழாவை நடத்துமாறும் ஆலோசனை வழங்குதல்.

*(08).* அதற்கமைய , மேற்கூறப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறும், அவ் விடயம் சம்பந்தமாக தங்களுக்கு கீழ் உள்ள சகல நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களுக்கும் அறியப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யுமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**எச்.எம். காமிணி செனெவிரத்ன**
**செயலாளர் ,**
**உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண**
**சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.**

பிரதிகள்.

01. சனாதிபதியின் செயலாளர் .
02. பிரதமரின் செயலாளர்.